2014 ஆகஸ்ட் 11]

வினா வரிசை எண் 394, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

394—

மகளிர் கல்லூரி

***6974—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, தாணிப்பாடி கிராமத்தில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) செங்கம் தொகுதி, தாணிப்பாடி கிராமத்தில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை முன்மாதிரி மாநிலமாக மாற்றிய புதுமைகளின் பொக்கிஷமே, பூவுலகின் புனிதமே, மலர் போன்ற மனம் கொண்ட மாதரசியே, மக்கள் மனதில் நிலைத்து வாழும் மங்கையர் திலகமே, சாத்திரத்தை வேதமாக்கிய அன்னையே, சாதனைகள் படைத்துக் கொண்டிருக்கும் அன்புத் தாயே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

முற்பகல் 10—30

எனது தொகுதிக்குட்பட்ட தாணிப்பாடி கிராமம், சுமார் 15 சிறிய கிராமங்களை உள்ளடக்கியதாகும். அந்தப் பகுதி, முக்கியமாக,

மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். மோத்தகல், பீமராவ்பட்டி, மேல்வலைசை, கீழ்வலைசை, அக்காபட்டி, உள்சொக்காடி, உள்ளூர்சொக்காடி, ஆத்திப்பாடி, மேல்பாச்சர், கீழ்பாச்சார், தாண்டா, பெருகுளத்தூர், இளையாங்கண்ணி போன்ற கிராமங்களில் இருக்கின்ற மக்களெல்லாம் பயன்பெறுகிற வகையிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், கேள்வி நேரத்தில் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, இந்தப் பகுதியில் ஒரு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, மகளிர் அதிகம் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, தமிழகத்திலே 53 கல்லூரிகளை அமைத்துக் கொடுத்தார்கள். அதிலே, 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் கிராமத்திலே ஒரு மகளிர் கல்லூரியும், தருமபுரி மாவட்டம், காரியமங்கலத்தில் ஒரு மகளிர் கல்லூரியும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த கிராமப் பகுதியிலே, கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்கு 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. கல்லூரி கட்டத் தேவையான நிலத்தை

2014 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகிறபோது, அந்தப் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புவாய்ந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அரசு கையகப்படுத்தியதைப்போல, தஞ்சாவூரில் உள்ள கரந்தை தமிழ்ச் சங்கத்தினுடைய அரசு உதவிபெறும் கல்லூரி, நிருவாகச் சிக்கலிலே மூழ்கியிருப்பது அரசுக்குத் தெரியும். அந்தக் கல்லூரியையும், ஈரோடு சிக்கய்யநாயக்கர் கல்லூரியையும் விரைவாக கையகப்படுத்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அரசு உதவிபெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 162 கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, சிதம்பரத்திலே இருக்கக்கூடிய அண்ணாமலை பல்கலைக்கழகம் நிருவாகச் சீர்கேட்டினால் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில், அங்கே இருக்கக்கூடிய மாணவ, மாணவிகளுடைய கல்வி நலன்*

கருதியும், கல்லூரிப் பேராசிரியர்களின் நலன் கருதியும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலேயே எந்த மாநிலமும் இதுபோன்ற ஒரு நிலையை எடுக்காத வேளையில், மக்கள் பாராட்டுகிற வகையில், மாணவர்கள் பாராட்டுகிற வகையில், கல்வியாளர்கள் பாராட்டுகிற வகையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அரசுடைமையாக்கினார்கள். அதன்மூலம் இன்றைக்கு மாணவர்கள் நேர்மையான முறையில் கல்லூரியில் சேர்வதற்கான வாய்ப்பினையும், இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே கல்லூரியில் சேர்வதற்கான வாய்ப்பினையும், குறைந்த கல்விக் கட்டணத்தில் சேர்வதற்கான வாய்ப்பினையும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

தஞ்சாவூரில் இருக்கக்கூடிய கரந்தை கல்லூரியும், ஈரோடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய சிக்கய்யநாயக்கர் கல்லூரியும் அரசு உதவிபெறும் கல்லூரிகள். அந்தக் கல்லூரிகள் தற்போது நிருவாகச் சீர்கேட்டால் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கல்லூரிகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இவற்றை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன் அவர்கள்.*

திரு. இரா. மணிமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் புனித மலர்ப் பாதங்களைப் பணிவுடன் வணங்குகிறேன். எனது பூந்தமல்லி தொகுதி, பூந்தமல்லி நகராட்சியில் உள்ள பார்வையற்றோர் பள்ளி மைதானத்தில் சுமார் 40 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடத்தில் கலைக் கல்லூரி ஒன்றை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பூந்தமல்லி தொகுதியில் 40 ஏக்கர் நிலம் இருப்பதாகச் சொன்னார்கள். நிலம் மட்டுமிருந்தால் அங்கே கல்லூரி தொடங்கலாம் என்பது நியதி அல்ல. இருந்தாலும், மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறபொழுது, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆங்காங்கே கல்லூரிகளைத் துவக்கி வருகிறார்கள். அதனடிப்படையிலே, கல்லூரி வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. ஆர். சுந்தர்ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர், பொன்னியின் செல்வி, காவேரி கண்ட தாய், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தி, விவசாயிகளின் கனவை நனவாக்கிய அன்னபூரணியே! (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பல திட்டங்கள்மூலம் கல்வியில் புரட்சி ஏற்படுத்தி வரும் சரஸ்வதியே! தங்களை வாழ்த்த வயதில்லை; வணங்குகின்றேன் தாயே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் ஏற்கெனவே மதுரை மீனாட்சி அரசு பெண்கள் கலைக் கல்லூரி உள்ளது. தமிழ்நாட்டில் சிறந்த மாநகராட்சியாகச் செயல்படும் மதுரை மாநகராட்சியின் சார்பாக இருபாலரும் பயிலும் வகையில், அரசு கலைக் கல்லூரி தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிக் கவனத்திற்குக் கொண்டு சென்று நிதியும், அனுமதியும் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மதுரைக்கு இரண்டு பாலங்கள், கழிவுநீர் வாய்க்கால் சீரமைப்பு ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மதுரை மாநகராட்சியின் சார்பாக கலைக் கல்லூரி

தொடங்கிட அனுமதியும், நிதியும் ஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று மதுரை மக்களின் சார்பாகக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதுரையில் இருபாலரும் படிக்கக்கூடிய வகையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்றபோது, தமிழகத்திலே உயர் கல்வி பெறுபவர்களுடைய எண்ணிக்கை 18 சதவிகிதமாக இருந்தது. அது இந்திய அளவிலே 15 சதவிகிதமாகத்தான் இருந்தது. ஆனால், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், எந்த மாநில அரசும் செய்யாத வகையில், தமிழகத்திலே 53 கல்லூரிகளைத் தொடங்கியதன் காரணமாக, இன்றைக்கு தமிழகத்திலே உயர் கல்வி பெறுபவர்களுடைய எண்ணிக்கை 38.2 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், தேசிய அளவில் 20.4 சதவிகித அளவிற்குத்தான் உயர் கல்வி பெறுபவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பெண்களுக்கென தனியாகக் கல்லூரிகள் வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்கள். மேலும், இருபாலரும் படித்துப் பயன்பெறக்கூடிய வகையிலே கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.*

National Gross Enrollment Ratio–*வைப் பொறுத்தவரையில், இந்திய அளவில் 18.9 சதவிகிதமாக இருக்கின்ற நிலையைக் காட்டிலும், தமிழகத்தில் இன்றைக்கு 38.2 சதவிகிதம் அளவிற்கு மிக அதிகமாக இருக்கிறது. இன்றைக்கு தமிழகத்திலே ஆண்களைப் பொறுத்தவரையில், 41.1 சதவிகிதம் அளவிற்கு உயர் கல்வி பெறுகின்ற ஒரு வாய்ப்பிருக்கின்றது. இது இந்திய அளவிலே சராசரியாக 21.6 சதவிகிதமாக இருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் மொத்தம் 38.2 சதவிகிதமாக இருக்கக்கூடிய காலகட்டத்தில்,*

2014 ஆகஸ்ட் 11]

இன்றைக்கு உலக அளவில் 23 சதவிகிதமாக இருக்கக்கூடிய காலகட்டத்தில், வளர்ந்த நாடுகள் அளவில் 54 சதவிகிதமாக இருக்கக்கூடிய காலகட்டத்தில், வளர்ந்த நாடுகளுக்கு ஒப்பாக, எந்த மாநிலத்தோடும் தமிழ்நாட்டை ஒப்பிட முடியாத அளவிற்கு, தமிழகத்திலே 38.2 சதவிகிதம் உயர் கல்வி பெறுபவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல; இன்றைக்கு அண்டை மாநிலங்களோடு ஒப்பிடும்போது, உயர் கல்வி பெறும் பெண்களுடைய எண்ணிக்கை தமிழகத்தில் 35.2 சதவிகிதமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆந்திராவைப் பொறுத்தவரையில், உயர் கல்வி பெறும் பெண்களுடைய எண்ணிக்கை 23.4 சதவிகித அளவிற்கு இருக்கிறது. கேரள மாநிலத்தைப் பொறுத்தவரையில், உயர் கல்வி பெறும் பெண்களுடைய எண்ணிக்கை 19.3 சதவிகிதமாக இருக்கிறது. (குறுக்கீடு) உயர் கல்வி பெறும் பெண்களுடைய எண்ணிக்கை குறித்து நான் சொல்கிறேன். கர்நாடகா மாநிலத்தைப் பொறுத்தவரையில், அது 22.2 சதவிகித அளவிற்கு இருக்கிறது. உத்தரப் பிரதேச மாநிலத்தைப் பொறுத்தவரையில், அது 14.4 சதவிகிதமாக இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இந்தியாவிலே எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு உயர் கல்வி பெறும் பெண்களுடைய எண்ணிக்கை 35.2 சதவிகிதமாக, அனைத்து மாநிலங்களைக் காட்டிலும், மிக அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை இப்பேரவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதுரை மாவட்டத்தில் பெண்களுக்கென தனியாகக் கல்லூரி இருக்கிறது. இருபாலரும் படிக்கக்கூடிய வகையில் ஒரு கல்லூரி தொடங்கிட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். ஏற்கெனவே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்கூட இதே கோரிக்கையினை முன்வைத்திருக்கிறார். தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட அதுகுறித்து கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, அங்கே இடம் இருக்கக்கூடியபட்சத்தில்,

நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி அதிக கிராமங்கள் இருக்கின்ற தொகுதியாகும். கல்வியில் தனியார் கல்லூரிகளோடு போட்டியிட முடியாத நிலையிருக்கிறது என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் சொல்லியவுடன், ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்வியை எளிதாகப் பெறுவதற்காக, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில், திருமங்கலத்திலே, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டு, அதில் மாணவர்கள் தற்போது படித்து வருகின்றார்கள். இந்தக் கல்லூரியில் நான்கு பாடப் பிரிவுகளே தற்போது உள்ளன. எனவே, ஏழையெளிய மக்கள், உழைத்து வாழக்கூடிய மக்களுடைய பிள்ளைகள் அதிகமாக அங்கே படித்து வருகின்ற காரணத்தினால், கூடுதல் பாடப் பிரிவுகளை ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகத்தில் 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை புதிதாகத் தொடங்க உத்தரவிட்டார்கள். அந்த 11 கல்லூரிகளில் ஒன்றுதான் மதுரை மாவட்டம், திருமங்கலம் பகுதியில் இருக்கக்கூடிய, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, அந்தக் கல்லூரிக்கு புதிய பாடப்

பிரிவுகள் வழங்கப்பட்டு, தற்போது கல்லூரி நடைபெற்று வருகிறது. அந்தக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் 7¼ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிலம் தேர்வு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கல்லூரிக்கு கூடுதல் பாடப் பிரிவுகள் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இதுவரை, தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த மூன்று ஆண்டு கால ஆட்சியில், ஏழை, எளிய கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவர்கள் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்திற்காக 960 கூடுதல் பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 270 பாடப் பிரிவுகளே வழங்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், மூன்றே ஆண்டுகளில் கூடுதலாக 960 புதிய பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கண்ட கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்றும், அங்கு கூடுதல் பாடப் பிரிவுகளைத் தொடங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அதற்கான வாய்ப்பு இல்லை. அடுத்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையினை ஏற்று, கூடுதலாக பாடப் பிரிவுகள் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 393, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

393—

பராமரிப்பு மையங்கள்

***29548—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—